அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திரு.என்.ராஜமாணிக்கம்.,எம்.ஏ.,

ந.க.எண்.583/2026/எப்1 நாள்:03.03.2026

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - அருப்புக்கோட்டை நகராட்சி - வார்டு F, பிளாக்எண் 11, நகரளவைஎண் 132/3,133/1,134ல் உள்ள 1.03 ஏக்கர் (4166.50 ச.மீ) பரப்பளவு உள்ள இடத்திற்கு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

பார்வை:1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் செயல்முறை ஆணை ந.க எண் SDRH3751/2026/TCP, நாள்:19.02.2026.

2. நகர் மன்ற முன் அனுமதி நாள்:03.03.2026.

அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு F, பிளாக் எண் 11, நகரளவைஎண் 132/3,133/1,134ல் 1.03 ஏக்கர் (4166.50 ச.மீ) பரப்பளவு இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் கோரி இணையதளம் வாயிலாக நகர்ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களுக்கு தங்களால் விண்ணப்பம் செய்ததன் பேரில் சாலை வடிவமைப்பு வரைபடம் நாள்.12.02.2026ல் நகர் ஊரைமப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தினை அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 956/2026, நாள்.13.02.2026ம் தேதிய ஆவணம் மூலம் நகராட்சிக்கு தானமாக பெறப்பட்டு மேற்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் நகராட்சி ஆணையாளர் பெயருக்கு பதிவு செய்யப்பட்டு நகராட்சியில் அசல் கிரைய ஆவணம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

மேலும் பார்வை 1ல் கண்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் விருதுநகர் அவர்களின் கடிதத்தில் மேற்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு வரைபட எண் ம.வ/ந.ஊ.து.இ.(விருமா) எண் 42/2026, நாள்.19.02.2026ல் மனைப்பிரிவு இசைவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவு ஒப்புதல் குறித்த விபரங்கள் மற்றும் சாலை ஒப்படைப்பு விபரங்கள் பார்வை 2ல் கண்ட இந்நகர் மன்றத்தின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களால் மனைப்பிரிவு இசைவு ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்

அருப்புக்கோட்டை நகராட்சி

3-3-26

இணைப்பு:-

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

பெறுநர்:-

திரு.T.R.வரதராஜன்,
1,S.T.R.N,தெரு,
வடுகர் கோட்டை.
அருப்புக்கோட்டை.